இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 36 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 29 – சனிக்கிழமை 14 செப்டம்பர் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 36: Thiruvalluvar Year - 2055 - Aavani 29 - Saturday 14 September 2024 - Madurai 12 Pages ₹ 5.00


## 75 ஆண்டுகால இயக்கத்தின் வரலாற்றுப் பெருவிழா!

# அண்ணாவும் கலைஞரும் அழைக்கிறார்கள்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு ‘உங்களில் ஒருவன்’ அமெரிக்க மண்ணில் இருந்து புறப்படும் முன் எழுதும் பவளவிழா அழைப்பு மடல்.**

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசு முறைப் பயணத்தில் ஏறத்தாழ இரண்டு வாரகாலமாக தொடர்ச்சியான பணிகளில் இருந்தாலும், என் உள்ளம் ஒவ்வொரு நொடியும் தமிழ்நாட்டைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறது. **உலகின் முன்னணித் தொழில் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றும் தமிழ்நாட்டின் தொழில் முதலீட்டினைப் பெருக்கி, இளைய தலைமுறையினருக்கான வேலைவாய்ப்பை வழங்கிட வழிவகுக்கின்றன.**

**‘முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு’ என்பதை வெறும் சொற்களாக இல்லாமல், முழுமையான செயல்களாக மாற்றிக் கொண்டிருக்கிறது ‘திராவிட மாடல் அரசு’.** அதை அமெரிக்காவில் வாழும்தமிழர்களும் நன்றாகப் புரிந்து கொண்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தங்களின் ஒத்துழைப்பை வழங்குவதில் ஆர்வமாக இருக்கிறார்கள்.

சிகாகோ நகரின் ரோஸ்மாண்ட் அரங்கத்தில் செப்டம்பர் 7 ஆம் நாள் அமெரிக்கத் தமிழர்களுடனான சந்திப்பு பெரும் உற்சாகத்தை அளித்தது. அமெரிக்காவில் இருக்கிறோமா, அன்னைத் தமிழ்நாட்டில்தான் இருக்கிறோமா என்கிற அளவிற்கு, 5000 தமிழர்களுக்கு மேல் திரண்ட ஒரு மினி தமிழ்நாடாக அந்த அரங்கம் அமைந்திருந்தது. இன - மொழி உணர்வால் அவர்களுக்கு நானும், எனக்கு அவர்களும் உறவாக அமைந்த சிறப்பான நிகழ்வு அது. அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து சிகாகோவில் நடந்த சந்திப்புக்கு வருகை தந்த தமிழர்களும், பணிச்சுமை உள்ளிட்ட காரணங்களால் வர இயலாமல் போனவர்களும் தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் ‘திராவிட மாடல்’ அரசு நிறைவேற்றியுள்ள சாதனைத் திட்டங்களைப் பாராட்டத் தவறவில்லை. அவர்களின் பாராட்டுகள், உங்களில் ஒருவனான எனக்குத் தமிழ்நாட்டின் நினைவுகளையே மீண்டும் மீண்டும் கிளறின. ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற ஜனநாயகப் பேரியக்கம் என்றென்றும் தமிழையும் தமிழர்களையும் காக்கின்ற இயக்கமல்லவா!

இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மாநிலக் கட்சி, முக்கால் நூற்றாண்டு காலத்தைக் கடந்து, மக்களின் பேராதரவுடன் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதுடன், இந்திய அளவில் கொள்கை வலிமைமிக்க தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய இயக்கமாகவும் திகழ்கிறதென்றால் அது, திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

செப்டம்பர் 15 - இந்த மாபெரும் இயக்கத்தை உருவாக்கித் தந்து, இந்த மாநிலத்தின் உரிமைகளைக் காத்து, ‘தமிழ்நாடு’ என்று நம் மாநிலத்திற்குப் பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள். செப்டம்பர் 17 – கொள்கைப் பேராசான் – பகுத்தறிவுப் பகலவன் - தந்தை பெரியார் பிறந்த நாள். அதே நாள்தான், ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்கிற பேரியக்கம் தொடங்கப்பட்ட நாள். இந்த மூன்றையும் இணைத்து, ‘முப்பெரும் விழா’ என்று பெயர்சூட்டி திராவிடத் திருவிழாவாகக் கொண்டாடும் வழக்கத்தை உருவாக்கியவர் நம் உயிர்நிகர் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர்.

**தன்னால் கழகத்திற்கு என்ன லாபம் என்று நினைத்துச் செயலாற்றுபவர்களை ‘இரத்த நாளம்’ என்று தெளிவான விளக்கம் தந்த தலைவர் கலைஞர் அவர்கள், தி.மு.கழகத்தின் இரத்த நாளங்களாக இருந்து, தங்கள் வாழ்நாளை இயக்கப் பணிக்கு அர்ப்பணித்தவர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கும் வழக்கத்தைத் தொடங்கி வைத்தார்; தொடர்ந்து வழங்கினார்.**

## உங்களில் ஒருவன்

ஏறத்தாழ 40 ஆண்டுகளாகத் தொடரும் இந்த சிறப்பான நடைமுறையின் அடிப்படையில் இந்த ஆண்டு ‘பெரியார் விருது’ திருமிகு பாப்பம்மாள் அவர்களுக்கும், ‘அண்ணா விருது’ அறந்தாங்கி திருமிகு ‘மிசா’ இராமநாதன் அவர்களுக்கும், ‘கலைஞர் விருது’ திருமிகு. எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அவர்களுக்கும், ‘பாவேந்தர் விருது’ கவிஞர் தமிழ்தாசன் அவர்களுக்கும், ‘பேராசிரியர் விருது’ திருமிகு. வி.பி. இராசன் அவர்களுக்கும், இந்த ஆண்டு முதல் அறிமுகமாகும் ‘மு.க. ஸ்டாலின் விருது’ திருமிகு எஸ்.எஸ். பழனிமாணிக்கம் அவர்களுக்கும் வழங்கப்படவிருக்கிறது.

கழகத்தில் சிறப்பாகப் பணியாற்றி வரும் நிர்வாகிகளுக்கும், பல்வேறு துறைகளில் மக்கள் பணியாற்றுபவர்களுக்கும் முப்பெரும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் வகுத்துத் தந்த வழியில் விருதுகள் வழங்கப் படவிருக்கின்றன.

செப்டம்பர் 17–ஆம் நாள் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் மிகப் பிரம்மாண்டமான முறையில் நடைபெறவுள்ள பவளவிழா நிகழ்வுகள் குறித்தும், மாவட்டங்கள்தோறும் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் குறித்தும் அமெரிக்காவில் இருந்தபடியே, கழகத்தின் ஒருங்கிணைப்புக் குழுவினருடன் காணொலியில் ஆலோசனைக் கூட்டம் நடத்தியதுடன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் பலரிடமும் தொடர்ந்து பேசி வருகிறேன்.

ஆகஸ்ட் 16–ஆம் நாள் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டதீர்மானத்தின் படி, கழக மாவட்டங்கள் பலவற்றிலும் கழகத்தின் பவள விழாவிற்கான சுவர் விளம்பரங்கள் எழில்மிகுந்த முறையிலே எழுதப்பட்டிருப்பதை காணொலிகளாக நம் கழக நிர்வாகிகள் அனுப்பியிருந்தார்கள். சிறப்பான முறையிலே சுவர் விளம்பரங்கள் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்.

கழகத்தின் கடைக்கோடி உறுப்பினரின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் உட்கட்சி ஜனநாயகத் தன்மையின் அடிப்படையில் கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் பங்கேற்கும் பொது உறுப்பினர்கள் கூட்டம் தொடர்ந்து நடைபெறுவதையும் அறிந்து கொண்டேன். வட்டவாரியாக - கிளைவாரியாக நடைபெற்ற இத்தகைய பொது உறுப்பினர்கள் கூட்டங்கள் பெரும்பாலான கழக

தொடர்ச்சி 2- ஆம் பக்கம்

## அமெரிக்காவில் 7,616 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து - இன்று காலை

# தாயகம் திரும்புகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## சென்னை விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு!

**சென்னை, செப்.14-**

**அமெரிக்காவில் முதலீடுகளை ஈர்க்க ஆகஸ்ட் மாதம் 27ஆம் தேதி புறப்பட்டுச் சென்ற முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று காலை தாயகம் திரும்புகிறார். சென்னை விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.**

முன்னதாக நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை புறப்பட்டார். முதலமைச்சரின் அமெரிக்கப் பயணத்தின் போது 18 நிறுவனங்களுடன் 7 ஆயிரத்து 616 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் முதலீடுகளையும், வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்காகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறைப் பயணம் மேற்கொண்டார்.

**சான் பிரான்சிஸ்கோ – சிகாகோ**

கடந்த மாதம் 27ஆம் தேதி சென்னையில் இருந்து சான்பிரான்சிஸ்கோ சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார். சான் பிரான்சிஸ்கோவில் முதலீட்டாளர்கள் சந்திப்பின் மூலம், 4 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையிலும், ஆயிரத்து 300 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் 8 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதைத்தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிகாகோ நகருக்குப் பயணம் மேற்கொண்டார். அங்கு பல்வேறு தொழில்துறையினருடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார். சிகாகோ நகரில் ஈட்டன் நிறுவனத்துடன் 200 கோடி ரூபாய் முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், இரண்டாயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் டிரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. சென்னையில் மருத்துவத்துறையில் ஏற்கனவே முதலீடு செய்துள்ள Optum நிறுவனம், திருச்சி, மதுரையில் தனது தொழிலை விரிவாக்கம் செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம், 100 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரத்தில் சென்சார்ஸ் மற்றும் டிரான்ஸ்டியூசர்ஸ் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கு விஷய் பிரிஷிஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், விஸ்டியன் நிறுவனத்துடன் 250 கோடி ரூபாய் முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

கேட்டர்பில்லர் நிறுவனம் தமிழ்நாட்டில் 500 கோடி முதலீட்டில் தனது ஆலைகளை விரிவாக்கம் செய்வதற்கான ஒப்பந்தமும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. RGBSI நிறுவனத்துடன் 100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அமெரிக்கப் பயணத்தின்போது 18 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதன்மூலம் 7 ஆயிரத்து 616 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதேபோல் தமிழ்நாட்டில் மூடப்பட்ட முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமான ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவன அதிகாரிகளைச் சந்தித்து மீண்டும் உற்பத்தியை தொடங்குவது குறித்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார். உலக அளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களைச் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு சிகாகோ நகரில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை புறப்பட்டார். சிகாகோ விமான நிலையத்திற்கு ஏராளமான அமெரிக்கவாழ் தமிழர்கள் திரண்டுவந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வழி அனுப்பி வைத்தனர்.

சிகாகோவில் இருந்து புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று காலை சென்னை திரும்புகிறார்... சென்னை விமான நிலையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க தி.மு.கவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.